## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் "செல்வத்துப் பயனே ஈதல்" என்று எதனால் வலியுறுத்துகிறார். *10*

(b) அரசனுக்கு இருக்க வேண்டிய மாண்புகளைத் திருக்குறள்வழி விளக்குக. *10*

(c) இளங்கோவடிகள் வையையைத் தற்குறிப்பேற்றம் அமைய எங்ஙனம் காட்சிப்படுத்துகிறார். *10*

(d) இராவணன் பூதலம் என்னும் நங்கைதன்னையே நோக்கிப் புக்கதேன் ? விளக்குக. *10*

(e) மழையை ஆண்டாள் எவ்வாறு பாடுகிறார் ? *10*

**Q2.** (a) கும்பகருணனின் பண்புநலன்களைப் புலப்படுத்துக. *20*

(b) குறுந்தொகையில் இடம்பெறும் வரலாற்றுக் குறிப்புகளை விளக்குக. *15*

(c) இறைவனிடம் மாணிக்கவாசகர் வேண்டுவன யாவை ? விளக்குக. *15*

**Q3.** (a) காதலால் கடவுளை அடையலாம் என்று காட்டியவர் ஆண்டாள் என்னும் கருத்தினை ஆராய்க. *20*

(b) இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் மதுரை நகரின் அமைப்பு குறித்து எழுதுக. *15*

(c) சோழன் நல்லுருத்திரன் இயற்றிய புறநானூற்றுப் பாடலின் திணை, துறைகளை விளக்கி அப்பாடலின் சிறப்பை மதிப்பிடுக. *15*

Q4. **பின்வருவனவற்றிற்கு இடம், பொருள், நயம் முதலியவற்றை விளக்குக :**

(a) அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும் *20*

(b) யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே *15*

(c) பொறுப்பார் அன்றே பெரியோர் சிறுநாய்கள் தம்
பொய்யினையே *15*

## SECTION B

**Q5.** **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) கண்ணம்மாவைக் குழந்தையாகக் கண்டு பாரதியார் உரைப்பனவற்றை விளக்குக. 10

(b) ‘வாழ்வின் வீடு’ எது என்று பாரதிதாசன்வழி நின்று விளக்குக. 10

(c) அண்ணாமலையின் அப்பாவித்தனத்தை அகிலன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ? 10

(d) மலையருவிவழி அறியலாகும் தாலாட்டுப் பாடலின் பொது இயல்புகளைப் புலப்படுத்துக. 10

(e) நா. காமராசனின் கருப்பு மலர்கள் புதுக்கவிதையில் செய்த மாற்றங்களை எடுத்துரைக்க. 10

**Q6.** (a) சி.என். அண்ணாதுரை தம் காலத் தமிழக நிலையாகச் சுட்டுவனவற்றை எழுதுக. 20

(b) குரு - சீடன் உரையாடல்வழி ஜெயகாந்தன் உணர்த்துவன யாவை ? 15

(c) மலையருவியில் தாது வருடப் பஞ்சம் எங்ஙனம் வெளிப்பட்டுள்ளது. 15

**Q7.** (a) முத்துப்பட்டனின் ஆளுமைகளை மதிப்பிடுக. 20

(b) ஜெயகாந்தன் சிறுகதைகளின் உவமைச் சிறப்பை விளக்குக. 15

(c) புரட்சி மனப்பான்மையைத் தீய்த்தவை குறித்து அண்ணா கூறுவன யாவை ? 15

(a) யாருக்கும் வெட்கமில்லைவழி வெளிப்படும் எள்ளல் சுவையை விளக்குக. *20*

(b) உரிமைப் பஞ்சம் பற்றிய மு.வ.வின் பார்வையைப் புலப்படுத்துக. *15*

(c) நாட்டுப்புறப் பாடல்களில் பழமொழிகள் ஆளப்படும் பான்மையினை மலையருவிவழிநின்று விளக்குக. *15*